*384 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that foodgrains that arrived by rail at Koilpatti Railway station on or about 1st March 1965 have been seized by the Civil Supply authorities;

(*b*) if so, the details of the Railway stations from where they were booked; and

(*c*) the steps taken to identify the persons responsible for such transportation?

The Hon. Sri V. RAMAIAH: (*a*) Yes, Sir.

(*b*) The consignments were booked mostly from various railway stations in Thanjavur district and a few stations in south Arcot district. A few bookings were made from Karaikudi in Ramanathapuram district.

(*c*) The persons responsible for such transportation could not be identified. As the movement of paddy and rice was irregular, none filed any claim for delivery of the stock. The Government therefore, directed that the entire stocks of paddy and rice which were seized should be purchased by the Government and the amount paid to the parties provided bona fide claim is made and that otherwise the sale proceeds should be forfeited to the Government.

திரு. ஆ. கு. சுப்பையா: இந்த உணவு தானியங்களைக் கடத்த ரயில்வே அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: ரயில்வே அதிகாரிகள் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்ற அவ்வளவு பெரிய குற்றச்சாட்டைச் சொல்ல நான் தயாராக இல்லை. இந்த வருஷம் பிப்ரவரி மாதம் 20-ம் தேதி வரை ஒரு தனி நபர் ஒரு குவிண்டால் வரை எடுத்துச் செல்லலாம் என்ற நிலை இருந்தது. அந்த அடிப்படையில் இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு சில பேர் ஏராளமான நபர்களுடைய பெயரில் ஒவ்வொரு குவிண்டாலாகப் பார்சல் செய்து மொத்தமாக அனுப்பினார்கள். போக்குவரத்தில் காலதாமதம் ஏற்பட்டு இவை ஸ்தலத்திற்குப் போய்ச் சேரும்போது ஒரு குவிண்டால் கொண்டு செல்லக் கூடாது, 10 படிதான் கொண்டு செல்லலாம் என்ற ஆர்டர் போடப்பட்டது. இதனால் அவர்களுக்குப் பாதகம் ஏற்பட்டது. அந்த மூட்டைகளை பயந்து கொண்டு வந்து எடுக்காமலே இருந்தார்கள். உணவு நெருக்கடி காரணமாக அவற்றை 'சீஸ்' பண்ணி கோவாப்பரேடிவ் சொஸைடிகளிடம் கொடுத்து விற்பனை செய்தோம். அவற்றை அனுப்பியவர்களிடமிருந்து வரக்கூடிய கோரிக்கைகள் நியாயமானதாக இருந்தால் பரிசீலனை செய்து பணம் கொடுக்கப்படுகிறது.

9th November 1965]

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கோயில் பட்டி ரயில்வே நிலையத்தில் கைப்பற்றப்பட்ட உணவு தானியங்களின் அளவு எவ்வளவு? அவை எவ்வளவுக்கு விற்கப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமையா :

	Paddy. BAGS.	*Rice.* BAGS.
Quantity delivered to consignees from the beginning of January up to 8th March 1965.	9,975	3,991
Quantity seized by Investigating Officer in Koilpatti station up to 4th March 1965.	3,129	2,734
Quantity seized by Investigating Officer at Nallattinpudur Railway station.	305	5
Quantity detained in an unopened wagon	—	690

கோயில்பட்டி ஏரியாவைப் பொறுத்தவரை இதுதான் விவரம்.

Ramnad District Court at Madurai

* 385 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that damages have occurred on 14—8—1965 to the building at Madurai where the Ramnad District Court is situated; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) Yes.

(*b*) On the afternoon of 14th August 1965, which was a Government Holiday, a big lump of mortar fell down from the western end of the ceiling of the hall where the District and Sessions Court, Ramanathapuram, is located in Tirumalai Naick Palace, resulting in the fall of a wooden plank from the wooden canopy in the Court-hall.

திரு. வை. சங்கரன் : இதற்கு முன்னாலேயே அந்தக் கட்டடத்தின் மேல் சுவர் பெருந்துண்டாக இடிந்து விழுந்தது என்பதும், அதோடு திருமலை நாயக்கர் மகாலில் பல பிளவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதும் சர்க்காருக்குத் தெரியுமா? அது மனித உயிருக்கும் மதிப்பற்ற தஸ்தாவேஜுகளுக்கும் ஆபத்தை விளைவிக்கும் என்று கருதி உடனடியாகப் புதிய கட்டடம் கட்டி நீதி மன்றத்தை மாற்ற முன் வருவார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : தனியாகக் கட்டடம் பார்த்து அதை மாற்றியமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கட்டடம் பார்த்து முடிந்த பிறகு அந்த ஆபீஸ்கள் எல்லாம் மாற்றியமைக்கப்படும்.